## சந்தா கட்டணவிகிதங்கள்

Usdaw வின் உறுப்பினர் சந்தா விகிதம்தான் அனைத்துத் தொழிற்சங்க இயக்கங்களிலேயே மிக மிகக் குறைவான விகிதமாகும்; நாள் ஒன்றுக்கு வெகு சில பென்னிகள் செலவில், முதல் தரமான பலன்கள் மற்றும் தொழில்முறை சேவைகளை இது வழங்குகிறது.

## மேலும் தகவல்களுக்கு அல்லது Usdaw வில் சேருவதற்கு;

- உங்கள் Usdaw பிரதிநிதியைத் தொடர்பு கொள்ளவும்
- உங்கள் உள்ளூர் Usdaw அலுவலகத்தை
  **0800 030 80 30**
  என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்
- **www.usdaw.org.uk**
  எனும் எங்கள் வலைத்தளத்திற்கு வருகை புரியவும்

இந்தச் சிற்றேட்டில் இருக்கின்ற தகவல்கள், 04/2026 மாதத்தில் அச்சிட்ட தேதிப்படி சரியானவையாகும்.

USDAW

வெளியீடு செய்தவர்கள் Usdaw
Voyager Building
2 Furness Quay
Salford Quays
Manchester M50 3XZ

Tamil

# நீங்கள்...

## தனிமையாக்கப்பட்டதாக உணர்கிறீர்களா?

## பணியில் உங்கள் உரிமைகள் என்ன என நிச்சயமாகத் தெரியவில்லையா?

## உங்களுக்கு ஆங்கில மொழி கற்க ஆசையா?

## Usdaw உங்களுக்கு உதவ முடியும் – நாங்கள்தான் உங்கள் தொழிற்சங்கத்தினர்.

USDAW

Usdaw வில் நீங்கள் ஏன் சேர வேண்டும் என்பதற்கான ஆறு நல்ல காரணங்கள்

**–உங்கள் தொழிற்சங்கம்.**

# Usdaw வில் நீங்கள் ஏன் சேர வேண்டும் என்பதற்கான ஆறு நல்ல காரணங்கள்...

1. பணியாளர்கள் தங்கள் பணியில் தங்களுக்கு இருக்கும் உரிமைகள் பற்றி தெரிந்துகொள்ள நாங்கள் உதவுகிறோம். உதாரணத்திற்கு, இவை பற்றிய உரிமைகள் உங்களுக்குத் தெரியுமா?

   - வயது வந்தோருக்கான குறைந்தபட்ச ஊதியம். இது ஒவ்வொரு ஆண்டும் உயர்ந்துகொண்டே வருகிறது மற்றும் ஏப்ரல் 1, 2026 லிருந்து உயர்த்தப்பட்ட விபரங்கள்:

     21 மற்றும் அதற்கு மேலான வயதினருக்கு மணிக்கு £12.71

     18 – 20 இடைப்பட்ட வயதினருக்கு மணிக்கு £10.85

     16 – 17 வயதினருக்கு மணிக்கு £8.00

   - வருடம் ஒன்றுக்கு ஊதியத்துடன் கூடிய 28 நாட்கள் விடுமுறை (வாரத்தில் 5 நாட்கள் வேலை செய்பவர் எவருக்கும்).

   - தினமும் 11 மணி நேர ஓய்வு.

   - மூன்று நாட்களுக்கும் மேலாக நோய்வாய்ப்பட்ட பெரும்பாலான பணியாளர்கள் அதன் பின்னர் நோய்வாய்ப்பட்டிருக்கும் நாட்களுக்கான ஊதியம் பெற தகுதியாவார்கள்.

2. நாங்கள் எங்கள் உறுப்பினர்களின் பிரச்சனைகளை நிர்வாகத்தினரிடம் முறையீடு செய்து அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை விசாரணைகளின்போது பிரதிநிதித்துவம் செய்வோம்.

3. பணியின்போது ஏற்படும் விபத்துக்கள், நியாயமற்ற பணி விலக்கம் அல்லது பாகுபாடுகாட்டுதல் ஆகியவற்றுக்கு, எங்கள் உறுப்பினர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை மற்றும் பிரநிதித்துவம் செய்கிறோம்.

4. ஆங்கிலம், கணிதம் மற்றும் கணினி செயல்பாடுகள் உள்பட்ட பல தரப்பிலான தலைப்புக்களில் இலவச பயிற்சிக்கான உதவிகளை எங்கள் உறுப்பினர்களுக்கு நாங்கள் ஏற்பாடு செய்கிறோம்.

5. இனப்பாகுபாட்டுக்கு எதிராகவும், அனைத்துப் பணியாளர்களையும் சரிசமமாக நடத்துவதற்குமான பிரச்சாரங்களை மேற்கொள்கிறோம்.

6. எங்கள் பணியாளர்களுக்கு பணியிடத்தில் ஊதியம் மற்றும் வாழ்க்கைத்தரத்தினை மேம்படுத்துவதற்காக உழைக்கிறோம்.

- ஒரு தொழிற்சங்கத்தில் யார் வேண்டுமானலும் சேரலாம்.
- ஒரு தொழிற்சங்கத்தில் சேருவதற்கான சட்டப்படியான உரிமை உங்களுக்கு உண்டு.
- நீங்கள் ஒரு தொழிற்சங்கத்தின் உறுப்பினராக இருப்பதை உங்களைப் பணியமர்த்தியவரிடம் கூற வேண்டியதில்லை.
- நீங்கள் ஒரு தொழிற்சங்கத்தின் உறுப்பினராக இருப்பதற்காக எவர் ஒருவரும் உங்களிடம் பாகுபாடு காட்டுவது என்பது சட்டத்திற்குப் புறம்பானதாகும்.